## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்
## அசல் வழக்கு எண். 113/2016

2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24-ஆம் நாள் புதன்கிழமை வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.ஜெ.நாகலட்சுமி (எ) விஜயராணி, பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | சக்திவேல் | தொழில் | - | |
| த.க.பெ. | - | | ஊர் | - | |
| வயது | - | | தாலுாக்கா | - | |
| மதம் | - | | மாவட்டம் | - | |

**24.08.2022 வ.சா.1 ம்- 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது தாயார் பெயர் பாக்கியம் என்றால் சரிதான். பாக்கியம் என்பது அவரது அழைக்கும் பெயராகும், அவரது முழுமையான பெயர் பாக்கியலட்சுமி. அதற்கு ஆவணம் உள்ளது. எனது பிறப்புசான்றில் எனது தாயார் பெயர் பாக்கியலட்சுமி என குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தாயாரின் தகப்பனார் ஊர் சிலம்பகவுண்டன்வலசாகும். அதனை காட்ட கிரைய ஆவணம் உள்ளது. இதுநாள் வரை கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயாரின் தகப்பனார் ஊர் சிலம்பகவுண்டன்வலசு அல்ல என்றால் சரியல்ல. தெய்வசிகாமணி கவுண்டரின் சொந்த ஊர் சிலம்பகவுண்டன்வலசு என்றால் சரிதான். தெய்வசிகாமணி தகப்பனாரான சிவன்மலைகவுண்டர் என்றால் சரிதான். தெய்வசிகாமணி சிறுவயதாய் இருக்கும்போதே சிவன்மலைகவுண்டர் அகாலமரணம் அடைந்துவிட்டார். தெய்வசிகாமணி கவுண்டரின் தாயார் பெயர் பருவதம்மாள் என்றால் சரிதான். பருவதம்மாளுக்கு தெய்வசிகாமணி கவுண்டரும் மற்றொரு மகளும் உண்டு என்றால் சரிதான். பருவதம்மாளின்

மகளை திருப்பூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார். தெய்வசிகாமணி கொங்குவேளாள கவுண்டர் இனத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். கொங்குவேளாள கவுண்டர் இனத்தில் நிறைய உட்பிரிவுகள் உண்டு என்றால் சரிதான். ஒரே கூட்டத்தை சார்ந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். அதேபோல் கோனார் என்பது கொங்கு வேளாள கவுண்டரை சாராத வேறு ஜாதி என்றால் சரிதான். கோனார் இனத்திலும் பல உட்பிரிவு கூட்டம் உண்டு என்றால் சரிதான். வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் எனது தாயாரின் தகப்பனார் பெயர் மாரியப்ப கோனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குறையில் எனது தாயாரும் தெய்வசிகாமணி கவுண்டரும் கொங்குவேளாளர் இனத்தை சார்ந்தவர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு இனத்தை சார்ந்ததாக தான் குறிப்பிட்டுள்ளேன். வேறு வேறு குலத்தை சார்ந்தவர் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கும் தெய்வசிகாமணி கவுண்டருக்கும் திருமணம் செய்வதற்கு உண்டான பதிவுசெய்யப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை ஆனால் 07.04.1971 ம் தேதி பழனி முருகன் கோவிலில்வைத்து நெருங்கிய நன்பர்கள் முன்னிலையல் திருமணம் நடைபெற்றது. அதனால் ஆவணம் எதுவும் என்னால் காட்டமுடியாது. அந்த காலத்தில் பழனி முருகன் கோவிலில் அத்தாச்சி சீட்டு எதுவும் தரவில்லை. அப்போது திருமணம் செய்து வைப்பவர்க்கு காணிக்கை தான் கொடுத்தார்கள். எந்தவகையில் காணிக்கை கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது. நானும் எனது தாயாரும் வழக்கு போட்டுள்ள நிலையில் எந்தவகை காணிக்கை என்று இது நாள் வரை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். தெய்வசிகாமணி- பாக்கியம் திருமணம் செய்து கொண்டதற்கான புகைப்படம், திருமண அழைப்பிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நெருங்கிய நன்பர்கள், திருமணத்தை தலைமை ஏற்று நடத்திவைத்த நபர் குறித்து வழக்குறையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 07.04.1971

காலகட்டத்தில் இருந்து 1979 வரை தெய்வசிகாமணி- பாக்கியம் ஒன்றாக குடும்பம் நடத்திவந்ததற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் பிறக்கவில்லை , சிலம்பகவுண்டன்வலசு உள்ள பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட வீட்டில் பிறந்தேன். நான் சிலம்பகவுண்டன் வலசு வீட்டில் பிறக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பிறப்பு சான்றானது (வா.த.சா.ஆ.1.) 1985 ம் வருடத்தில் தாராபுரம் குற்றவியல் நடுவர் மன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டு என்னால் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்து வா.த.சா.ஆ.1 சான்று பெற்றுள்ளார். எனது பிறப்பு சான்றிதழ் 14 வருடங்களுக்கு பின்புதான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். **வா.த.சா.ஆ.**1 ஆவணத்தில் எனது பிறப்பு நாள் 27.08.1972 என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வெள்ளகோவில் புனித அமலா அன்னை மெட்ரிகுலேசன் பள்ளியில் 4 வகுப்புவரை படித்தேன். அதற்கு பின்னிட்டு காங்கேயம் சாரதா மெட்ரிகுலேசன் பள்ளியில் படித்தேன். புனித அமலா அன்னை மெட்ரிகுலேசன் பள்ளியில் படிப்பை முடித்து சாரதா மெட்ரிகுலேசன் பள்ளியில் சேரும்போது எனக்கு வயது 9 என்றால் அது பற்றி என்னால் கருத்துசொல்ல இயலவில்லை. புனித அமலா அன்னை மெட்ரிகுலேசன் பள்ளி மாற்றுச் சான்றிதழில் எனது பிறந்த தேதி 09.02.1972 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மாற்றுச்சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆட்சேபணை இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் இருப்பது தெய்வசிகாமணி கவுண்டர் என்றால் சரிதான். தெய்வசிகாமணி கவுண்டர் அருகில் இருக்கும் கழுத்தில் மாலையிட்டுள்ள பெண்மணி ஞானசவுந்தரி என்றால் அவரை யார் என்றே எனக்கு தெரியாது. **புகைப்படம் (12 எண்ணிக்கை) பி.த.சா.ஆ.** 1(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). **பி.த.சா.ஆ.1 ஆவனத்தில்** கண்ட பெண்மணி எனது தாயார் அல்ல என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கும் தெய்வசிகாமணி கவுண்டருக்கும் 26.02.1978 ம் தேதி

முன்னால் சட்டமன்ற உருப்பினர் குட்டபாளையம் கே.எம். சாமிநாதன் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அதில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கும் தெய்வசிகாமணி கவுண்டருக்கும் திருமணம் நடந்த 1 வருட காலத்தில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. திருமணமே நடைபெறவில்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு,சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம்/ திருமதி.ஜெ.நாகலட்சுமி (எ) விஜயராணி, பி.ஏ., பி.எல்..
மாவட்ட உரிமையியல் நீதிபதி,காங்கயம்.